# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

## OS.No.107/2024

dated : 10.02.2026

P.W. 1

Name பேச்சியம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>2 மற்றும் 15 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சிவகிரி நீதிமன்றத்தில் மூத்த கட்டளை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கணவரை இழந்தவர் என்ற பிரிவில் வேலைக்குச் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதி என் அக்காவின் கணவர் ஆவார். அவர் என் கணவர் ஆவார். நான் அவருக்கு இரண்டாவது மனைவி. நான் அவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதியின் கணவர் ஓட்டுநர் என்றால் சரிதான். அவர் இறந்துபோனார். அவரது ஓய்வூதியத்தை நான்தான் பெற்று வருகிறேன். 5 ம் பிரதிவாதி என் கணவரே அல்ல என்றும் ஓய்வூதியத்தை பெறுவதற்காகவே மோசடியான ஆவணத்தை உற்பத்தி செய்து மனைவி என்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்து என் தந்தை பெருமாளுக்குரியது. அவருக்கு நானும், அக்கா சரஸ்வதி மற்றும் சீதாலட்சுமி, கலையரசி, ஹரிதாஸ், கிருஷ்ணம்மாள் ஆகியோர் ஆவார்கள். பெருமாளுக்கு

பாத்தியப்பட்ட சொத்து என்பதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அது பட்டா ஆகும். நான் இவ்வழக்கில் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்பதால் அவருக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்பட்ட பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூட்டாக அனுபவித்து வருகிறேன் என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 11ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி சொத்தின் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 10ம் பிரதிவாதிக்கும் ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. 2018ம் ஆண்டில்தான் அவ்வாறு கிரையம் கொடுத்த விவரம் தெரியும். 20.02.1997ல் என் தந்தை பெருமாள் இறந்துபோனார். இந்த சொத்திற்கு முன்னதாக சங்கரன்கோவில் சார் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்தது அந்த வழக்கு முடிந்த பின்னர் பங்கு தருகிறேன் என்று என் அப்பா சொன்னார். நான் முதலில் ஒரு திருமணம் செய்திருந்தேன். என்னுடைய 27 வயதில் அவ்வாறு திருமணம் செய்தேன். சுமார் 8 வருடம் கழித்து பாண்டி என்பரை திருமணம் செய்தேன் அவர் 5ம் பிரதிவாதி ஆவார். என் தந்தை இறந்தபின்னர் என் அம்மாதான் சொத்தை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல நாங்கள் அனைவரும் பராமரித்து வந்தோம். அதில் விவசாயம் செய்யவில்லை. மழை பெய்தால் பயிரிடுவோம். என் தாயார் 1ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

சரஸ்வதிக்கு மாரியம்மாள் என்ற ஒரு மகள் உண்டு அவர் 15 ம் பிரதிவாதி ஆவார். அவர் வழக்குரைச் சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டி வேலி அமைத்துள்ளார் அவருக்கு இரசீது வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10 ம் பிரதிவாதியும் அதில் ஒரு அறை கட்டியுள்ளார் என்றால் சரிதான் அதில் மின் இணைப்பு பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முருகன் என்பவரும் அதில் ஒரு பகுதிச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. வழக்குரைச் சொத்தின் மதிப்பு பட்டியல் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். வழக்குரையில் வழிகாட்டு மதிப்பு என்று எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் கிரைய விவரங்களை தெரிந்து கொண்டே தாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. 2018 ல் பாகம் கேட்டேன் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2017 என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2017 ல் கேட்டேன் என்பதுதான் சரியாகும். நான் வழக்கு தாக்கல் செய்யும் முன்பு வில்லங்கம் பார்த்ததாக கூறியுள்ளேன் அதற்கான சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணம்மாள் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 5 ம் பிரதிவாதியின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் நான் பாண்டியின் மனைவி அல்ல என்பது தெரிந்து விடும் என்பதால் அதனை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்தின் புல எண் தெரியாது. வழக்குரைச் சொத்தை 1 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதிக்

கொடுக்கப்பட்டது தெரிந்தபின்னரும் அது 10, 11 பிரதிவாதிகளுக்கு விற்கப்பட்டது தெரிந்தபின்னரும் பின்னர் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்து பற்றி எதுவும் தெரியாது என்றும் எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**6, 8 , 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**11 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

வழக்குரைச் சொத்தின் மொத்த விஸ்தீரனம் 90 செண்ட் ஆகும். அதில் எனக்கு 1/6 பாகம் 15 செண்ட் பாத்தியப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தலா 1/6 பாகம் பாத்தியப்பட்டது. மூவருக்கும் சேர்த்து 3/6 பாகம் பாத்தியம் என்றால் சரிதான். அந்த வகையில் 45 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான். அதில் 23 செண்ட் 11 ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கிற்கு பின்னர் அது தெரியும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிருரை விவரங்களை படித்துப் பார்த்தேன். சீதாலட்சுமி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 01.08.2007 தேதியன்று அட்டவணை சொத்தில் ஒரு பகுதியை 11 ம் பிரதிவாதிக்கு மேல்பகுதியில் உள்ள 23 செண்ட் கிரையம் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். 15 ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையிலும் அவ்வாறு கிரையம் பற்றி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் 11 ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் என்றால் சரிதான் அது பி.சா.ஆ.1 ஆகும். மேற்படி 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 23 செண்ட் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளதால்

அது அவர்களுக்கு உட்பட்ட பங்கு சொத்து என்றால் சரிதான். அந்த இடத்திற்கு முருகன் பெயரில் தீர்வை செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது பி.சா.ஆ.2 ஆகும். எனக்கு 15 செண்ட் மட்டும்தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முருகன் 23 செண்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 11ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்க்கவில்லை. 11ம் பிரதிவாதி என்ன எழுதிப் போட்டுள்ளார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டேன். 11ம் பிரதிவாதி எனது வழக்கில் கோரியுள்ளபடி பாகம் பிரித்துக் கொள்ள தயாராக இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அதில் தகைமை நெறிப்படி அவருக்கு விற்கப்பட்ட சொத்தை அவருக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுள்ளார் என்றால் சரிதான். 11ம் பிரதிவாதி சில பகுதியை விற்றுள்ளார் அவ்வாறு விற்ற சொத்தையும் சேர்த்து 23 செண்டை 11ம் பிரதிவாதிக்கு ஒதுக்குவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. நான் 11ம் பிரதிவாதியை பாகம் பிரிக்க அழைக்கவில்லை. நான் மற்ற பிரதிவாதிகளிடமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் பாகம் கோரி வழக்கறிஞர் மூலமாகவோ கடிதம் மூலமாகவோ அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் சரிதான். 11ம் பிரதிவாதி ரூ.100000/- ற்கு மேல் செலவளித்து அவர் கிரையம் பெற்ற சொத்தை அபிவிருத்தி செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. செல்வசிங் கிரையம் பெற்றுள்ள சொத்தில் வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல அறை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், பாண்டியனும், கோமதி, தனலட்சுமி, பானு, சாவித்ரி ஒரே வீட்டில் வசித்தோம் என்றால் சரிதான் தற்போது திருமணமாகி சென்றுவிட்டார்கள். 6

முதல் 9 பிரதிவாதிகளும் நானும் தற்போதும் ஒரே வீட்டில்தான் வசித்து வருகிறோம் என்றால் சரியல்ல. 11ம் பிரதிவாதி எங்கள் குடும்பத்தை பொறும் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். குடும்ப உறுப்பினர் அல்லாத நபர் கிரையம் பெற்றுள்ளதால் அவருக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கத்துடன் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்தில் என் பங்கு போக 75 செண்ட் முழுவதுமாக கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. நான் வழக்குரைச் சொத்தில் ஒரு போதும் அனுபவித்தது இல்லை என்றும் எனவே கூட்டு அனுபவித்தில் இருப்பதாக நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. 2007ம் ஆண்டிலேயே எனக்கு 11ம் பிரதிவாதி கிரையம் பற்றி தெரியும் என்றும் நான் தாமதமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இவ்வழக்கு காலவரம்பால் பாதிக்கப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. 10, 11ம் பிரதிவாதிகள் கிரையம் செல்லதக்கது என்றும் அவைகள் உரிய மறுபயனுக்கு பெற்ற கிரையம் என்பதால் அதனை நான் கேள்வி எழுப்ப இயலாது என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யான விபரங்களை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.02.10 17:13:59 +0530